
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1097

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# திராவிட மாடல் அரசு

நீரை.மகேந்திரன்

156




`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நம் முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...

## உலக மகளிர் உச்சி மாநாடு - 2026 மற்றும் தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்!

### பெண் தொழில்முனைவோரின் புதிய பாதை!

2030-ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை, ஒரு டிரில்லியன் டாலர் என்கிற அளவில் வளர்ப்பதற்கு, தொலைநோக்குத் திட்டங்களையும் அதற்கான செயல்களையும் தொடங்கி, அவற்றை வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருக்கிறது திராவிட மாடல் அரசு. இந்தப் பயணத்தில், தமிழ்நாட்டுத் தொழில் துறையில் பெண்களின் பங்களிப்பை மேம்படுத்துவது, சமூக மற்றும் பொருளாதார அதிகாரமளித்தலை வலுப்படுத்தும் நோக்கத்தில், சென்னையில் இரண்டு நாட்கள் **‘உலக மகளிர் உச்சி மாநாடு’** நடத்தி, பெண் தொழில்முனைவோர்களுக்குப் புதிய பாதையைத் திறந்து வைத்துள்ளது திராவிட மாடல் அரசு.

திராவிட மாடல் நாயகர் நம் முதலமைச்சர் அவர்களின் தலைமையில் அமைந்துள்ள, சிறப்பு திட்டச் செயலாக்கத் துறையின்கீழ் செயல்படும் வகையில், தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் (TN WESAFE) தொடங்கப்பட்டு, அதன் சார்பில், சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் 2026 ஜனவரி 27 மற்றும் 28 தேதிகளில் இந்த **‘உலக மகளிர் உச்சி மாநாடு’** நடைபெற்றது.

அனைத்து துறைகளிலும் பெண்கள், பணி வாய்ப்புகளைப் பெறுவதற்கும் பணிகளில் நீடிப்பதற்கும், மீண்டும் பணிக்குத் திரும்புவதற்கும் உதவும் வகையில், நீண்டகால இலக்குகளைத் திட்டமிடும் முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்த உலக மகளிர் உச்சி மாநாடு நடைபெற்றது.

**உலக வங்கியின் உதவியுடன்**

பெண்களின் பணியிடப் பாதுகாப்பு மற்றும் பங்கேற்பை நோக்கமாகக் கொண்ட தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் (TN WESAFE) திட்டம், நீண்டகாலத் திட்டமாக இந்த உலக மகளிர் உச்சி மாநாட்டில் தொடங்கி வைக்கப்பட்டது.

இந்தத் திட்டம், உலக வங்கியின் 1,185 கோடி ரூபாய் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட உள்ளது. 2024-ஆம் ஆண்டு முதல் 2029-ஆம் ஆண்டு வரை ஐந்து ஆண்டு காலத்துக்கு செயல்படுத்தப்பட உள்ளது. இதன்மூலம், பணிபுரியும் பெண்கள் மற்றும் தொழில் தொடங்க விரும்பும் பெண்களுக்கான இன்கியூபேஷன் மையங்கள், கூட்டு வேலைப்பகுதிகள், சந்தைப்படுத்துதல் ஆதரவு உள்ளிட்ட தொழில்முனைவோர் உதவிகள் வழங்கப்பட உள்ளன.

பெண்களின் பாதுகாப்புக்காகத் தனிப்பட்ட அவசர உதவி தொலைபேசிகள், இடம் சார்ந்த ஆதரவு மையங்கள், பணியிடங்களில் பாலியல் தொந்தரவு மற்றும் பாகுபாடு தொடர்பான புகார் பதிவு வசதிகளும் ஏற்படுத்தப்பட உள்ளன.

அதே நேரத்தில், தமிழ்நாட்டில் தொழில் துறைகளில் பெண்களின் பங்களிப்பை மேம்படுத்துவது மற்றும் ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில், UNDP, IPE Global மற்றும் பல்வேறு தொழில் நிறுவனங்கள் உள்ளிட்ட அமைப்புகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MOUS) மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த மகளிர் உச்சி மாநாட்டில், மாநிலத் திட்டக் குழு, மாநில மகளிர் ஆணையம், தொழில்துறை பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் சமூக அமைப்புகளின் கொள்கை கலந்துரையாடல்களும் நடைபெற்றன. மாநாடு நடைபெற்ற ஜனவரி 27 மற்றும் 28 ஆகிய இரண்டு நாட்களில் 11 கருப்பொருள்களில் அமர்வுகள் நடைபெற்றன. 70-க்கும் மேற்பட்ட ஆளுமைகள் உரை நிகழ்த்தினர்.

**வளர்ச்சிக்கான விவாதங்கள்**

மாநாட்டில் திறன் மேம்பாடு, தொழில் முனைவு, பணியிடப் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புச் சேவைகள் தொடர்பான விவாதங்களும் நடைபெற்றன. குறிப்பாக, பெண்கள் விவசாயத் துறையிலிருந்து விவசாயம் அல்லாத மற்றும் முறைப்படுத்தப்பட்ட வேலைவாய்ப்புத் துறைகளுக்கு மாறுவதற்கு, அவர்களுக்குத் தேவையான உதவிகள் அளிப்பது தொடர்பான உரையாடல்கள் நிகழ்ந்தன.

இந்த விவாதங்கள், உரையாடல்கள் அனைத்தும் TN WESAFE திட்டத்தைச் செயல் படுத்துவதற்கு ஏற்ப, மாநில அளவிலான திட்டத் தயாரிப்புகளை உருவாக்குவதற்கு உதவும் வகையில் அமைந்தன.

ஜனவரி 28, நிறைவு விழா அன்று உரை நிகழ்த்திய மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், ‘பெண்கள் திறன் மேம்பாடு மற்றும் முறையான வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்கு, மாநில அளவிலான பிரச்சார இயக்கம் ஒன்று தொடங்கப்பட உள்ளது’ என அறிவித்தார்.

தொடக்க நாளன்று உரையாற்றிய முதலமைச்சர் அவர்கள், பெண்களின் நலன் மற்றும் அவர்களுக்கு உரிய அதிகாரமளித்தல் என்கிற வகையில், கழக அரசு இதுவரை எடுத்துள்ள பல்வேறு நடவடிக்கைகளையும் தனது உரையில் பட்டியலிட்டார். தவிர, பெண்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பு, தொழில் முனைவோர் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பான சூழலை உருவாக்கத் தேவையான அடித்தள வசதிகளை, நமது அரசு உறுதியாக உருவாக்கும் என்றும் குறிப்பிட்டார்.

திராவிட மாடல் நாயகர் அவர்கள் கூறியபடி, கல்வி, அரசியல், வேலைவாய்ப்புகளில் பெண்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் பெற எண்ணற்ற போராட்டங்களைச் செய்துள்ளது திராவிட இயக்கம். அந்தப் போராட்டத்தினைப் பொருளாதாரக் களத்தில் நிகழ்த்தும் வகையில், மகளிர் உச்சி மாநாட்டை நடத்தி, வெற்றி கண்டுள்ளது, திராவிட மாடல் அரசு.

**...சாதனை தொடரும்**




### மகளிருக்கான பல்வேறு வாகனங்களின் சேவைகள்!

உலக மகளிர் உச்சி மாநாடு தொடக்க விழா அன்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மகளிர் விடியல் பயணம் மேற்கொள்ளும் வகையில், பத்து பிங்க் பேருந்துகள், மகளிர் பாதுகாப்பிற்காக மகளிர் காவலர்களுக்கு வாகனங்கள், மகளிருக்கு பிங்க் ஆட்டோ எனப் பல நலத்திட்டங்களையும் தொடங்கிவைத்தார்.





> “பெண்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பு, தொழில் முனைவோர் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பான சூழலை உருவாக்கத் தேவையான அடித்தள வசதிகளை, நமது அரசு உறுதியாக உருவாக்கும்!”

### சங்கிகளை விரட்டிய சாமானிய இந்து!

உத்தரகாண்ட் மாநிலம், கோத்வாரில் இஸ்லாமிய முதியவர் ஒருவர் நீண்டகாலமாக ‘பாபா’ என்ற பெயரில், கடை ஒன்றை நடத்திவருகிறார். சில தினங்களுக்கு முன், அந்தக் கடைக்குள் புகுந்த பஜ்ரங் தள் அமைப்பைச் சேர்ந்த சிலர், கடையின் பெயரை மாற்ற வேண்டுமென்று மிரட்டியுள்ளனர். வயதான முதியவரை மிரட்டுவதைப் பார்த்து, அங்கிருந்த இளைஞர் ஒருவர், ‘இஸ்லாமியர் பெயரில் கடை வைத்திருந்தால், உங்களுக்கு என்ன பிரச்சினை? இஸ்லாமியர்கள் இந்த நாட்டின் குடிமக்கள் இல்லையா?’ என அவர்களிடம் வாதம் செய்துள்ளார்.

உடனே அந்த நபரைப் பார்த்து, ‘யார் நீ, உன்னுடைய பெயர் என்ன?’ என்று சங்கிகள் மிரட்டியுள்ளனர். தீபக் என்ற அந்த இளைஞர், ‘என் பெயர் முகமது தீபக்’ எனக் கூற, சங்கிகள் வாயடைத்துப்போயினர். அருகே இருந்த பிற இந்துக்களும் சேர்ந்து, பஜ்ரங் தள் அமைப்பினரைக் கேள்வி கேட்க, கடையைச் சேதப்படுத்தாமல், அந்த முதியவரைக் காயப்படுத்தாமல் அங்கிருந்து ஓடிவிட்டனர் அந்த சங்கிகள்.

இந்த வீடியோ காட்சிகள், சமூக வலைதளங்களில் காட்டுத்தீயாகப் பரவியுள்ளன. ‘தீபக்கின் துணிச்சல், சமூகப் பொறுப்புணர்வின் வெளிப்பாடு. இத்தகைய துணிச்சலான நடவடிக்கைகள்தான் சங்கிகள் இந்த மக்களிடமிருந்து பறிக்கத் துடிக்கும் ஒற்றுமை, சகோதரத்துவத்தைக் காக்க உதவும்’ என்று தீபக்கிற்குப் பாராட்டுகள் குவிந்து வருகின்றன. வட இந்தியா முழுமையும் சங்கிகளுக்கு எதிராக இத்தகைய எதிர்வினைகள் பெருகி, அவர்கள் விதைக்க நினைக்கும் இஸ்லாமிய வெறுப்புணர்வு மடிந்து, சகோதரத்துவம் தழைக்கட்டும் என்று கூறி, பலரும் இந்த வீடியோவைப் பகிர்ந்து வருகின்றனர்.

### ஃப்ளாஷ்பேக்

#### கழகமும் தலைமுறை உறவும்!






1997-ஆம் ஆண்டு, ராஜபாளையம் மேற்குத் தொடர்ச்சி மலை அய்யனார் கோயில் பகுதியில், இளைஞர் அணி பயிற்சிப் பாசறைக் கூட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள் வருகை தந்து, பங்கேற்றவர் களைப் பாராட்டி, சான்றிதழ் வழங்கினார். அப்போது, சிவகாசி ஒன்றிய இளைஞர் அணித் துணை அமைப்பாளராகவும், திருத்தங்கல் பேரூராட்சி 12-வது வார்டு கவுன்சிலராகவும் இருந்த எனக்கு, ‘நெஞ்சுக்கு நீதி’ நூலின் முதல் மூன்று பாகங்களை வழங்கினார். 28 ஆண்டுகளுக்குப் பின், என் மகன் சிவகாசி மாநகரப் பகுதிச் செயலாளர் கு.மாரீஸ்வரன், ‘உடன்பிறப்பே வா’ நிகழ்ச்சியில் தலைவரைச் சந்தித்து, அவர் கையொப்பம் இட்ட ‘உங்களில் ஒருவன்’ புத்தகத்தைப் பெற்றது, பெருமை அளிக்கிறது.


எஸ்.குருசாமி

**– எஸ்.குருசாமி, திருத்தங்கல், மண்டலத் தலைவர், சிவகாசி மாநகராட்சி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

### கருவூலம்

#### ஆட்சியின் நோக்கங்கள்!

1967-ஆம் ஆண்டு, கழகம் ஆட்சி அமைத்த பின்னர், மார்ச் 9-ஆம் தேதி, சென்னை மாநகராட்சி மன்றம் வரவேற்பு அளித்தது. அங்கு உரையாற்றிய பேரறிஞர் அண்ணா, “நாட்டில் எண்ணற்ற மக்கள் இருக்க இடமின்றி, உண்ண உணவின்றித் துன்புற்று இருப்பதை நாம் மறந்துவிடக் கூடாது. வாழ்வில் நலிந்து வாழும் அந்த ஏழைச் சமுதாயத்தின் இன்னல்களைக் களைவதையும் ஏற்றம் பெறச்செய்வதையும்தான் நமது தலைசிறந்த நோக்கமாகக் கொள்ள வேண்டும்” என்று எதிர்காலத் திட்டங்களை விளக்கினார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131